20…………அன்று

கொழும்பில்

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ
இல. 40, நவம் மாவத்தை,
கொழும்பு 02

அன்புள்ள ஐயாீர்,

<u>**வங்கி உத்தரவாதங்களுக்கான நட்டோத்தரவாதக் கடிதம்**</u>

(இதனகத்துப்பின்னர் ''கம்பெனி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கையில் …………………………………… என்னும் பதிவிலக்கத்தின்கீழ் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் ……………………………………………………………. என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான கம்பெனியொன்றாகவுள்ள ……………………………………..………. ஆகிய நாம், கம்பெனியின் கோரிக்கையின் பேரில் எவரேனும் திறத்தவருக்கு வங்கியினால் ஏலவே வழங்கப்பட்டதும் இப்போது நிலுவையாகவுள்ளதுமான உத்தரவாதக் கடிதங்கள் அத்துடன் / அல்லது பிணைப்பொறுப்பு முறிகளுக்கு (உத்தரவாதக் கடிதங்கள்'') மேலதிகமாக அல்லது அவற்றுக்குப் பதிலீடாக, சொல்லப்பட்ட கம்பெனியினால் எவரேனும் திறத்தவருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் எவரேனும் திறத்தவருக்கு கம்பெனியினால் பணங்களின் கொடுப்பனவை உத்தரவாதமளிப்பதன்மூலம் அல்லது அதன் சார்பாக தேவைப்படுத்தக்கூடியவாறான மேலதிக உத்தரவாதக் கடிதங்களை இப்போதும் காலத்துக்குக் காலம் இதனகத்துப்பின்னரும் வழங்குவதற்கு, (இதனகத்துப் பின்னர் ''வங்கி'' என அழைக்கப்படும்) PQ 27 என்னும் பதிவிலக்கத்தின்கீழ் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் கொழும்பு 02, நவம் மாவத்தை இல. 40 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான வங்கித்தொழில் கம்பெனியொன்றாகவுள்ள **நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சீ** மற்றும் உரித்தில் உமது அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் அத்துடன் உமதூடாக அல்லது அவர்களினூடாக அல்லது உமக்கு அல்லது அவர்களுக்குக் கீழ் உரிமைகோருகின்ற எல்லா ஆட்களையும் இத்தால் கோரி அதிகாரமளிக்கின்றோம்.

அத்துடன் உத்தரவாதக் கடிதங்கள் தொடர்பாக அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற அல்லது நீர் அதனை வழங்கியமையின் விளைவாக எழுகின்ற (உத்தரவாதக் கடிதங்கள் தொடர்பாக அல்லது இந்நட்டோத்தரவாதத்தின்கீழ் உமது உரிமைகளை வலுவுறுத்துவதில் அல்லது வலுவுறுத்துவதற்கு எத்தனிப்பதில் நீர் உறக்கூடிய எல்லா சட்ட மற்றும் வேறு செலவு தொகைகளும், விதிப்பனவுகளும் மற்றும் செலவுகளும் உட்பட) வழக்குகள், கோரிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், பொறுப்புக்கள், இழப்புக்கள், சேதங்கள், வட்டி,

செலவுதொகை, விதிப்பனவுகள், செலவுகள் அல்லது எத்தகையதுமான வேறு தொகைகள் எல்லாவற்றிலிருந்தும் அவற்றுக்கெதிராகவும் வங்கிக்கு தீங்கேற்படாது பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் நட்டோத்தரவாதமளிப்பதற்கும் நாம் உடன்பட்டு பொறுப்பேற்கின்றோம்.

அத்தகைய பணத்தொகைகளை முழுமையாக எம்மால் கொடுப்பனவு செய்யப்படும் வரை அவை உம்மால் முதலாவது செலுத்தப்பட்ட அல்லது உறப்பட்ட தேதியிலிருந்து (அத்துடன் தீர்ப்புக்கு முன்னரானவாறு பின்னரும்) அவற்றின் மீதான வட்டியுடன் சேர்த்து முதலாவது கோரிக்கையின் மீது உமக்கு அவற்றை நாம் செலுத்தவும் மீளளிக்கவும் வேண்டும் என நாம் மேலும் உடன்படுவதுடன் ஏதேனும் முறையில் அல்லது எவ்வகையினதுமான ஏதேனும் நோக்கத்துக்கு வங்கியின் உடைமைக்கு அல்லது கட்டுப்பாட்டுக்கு வருகின்ற எல்லாப் பணங்களும் ஆதனங்களும் இந்நட்டோத்தரவாதம் தொடர்பில் பிணைப்பொறுப்பாக எதிரீடு செய்தல் மற்றும் வங்கிக்கு ஒதுக்கீடு செய்யும் உரிமையுடன் எம்மால் அடைமானம் வைக்கப்படுதல் வேண்டும் எனவும் உடன்படுகின்றோம்.

எமக்கான ஏதேனும் குறிப்பீடு இன்றி அல்லது எம்மாலான மேலதிக அதிகாரமின்றி மற்றும் அவற்றுக்கான நியாயப்படுத்துகை பற்றிய விசாரணையின்றி அல்லது உத்தரவாதங்கள் தொடர்பாக அல்லது அவற்றின் கீழ் உம்மால் பெறப்பட்ட ஏதேனும் கூற்று அல்லது சான்றிதழின் செல்லுபடியாந்தன்மை, உண்மைத்தன்மை அல்லது செம்மை பற்றிய விசாரணையின்றியும் எம்பக்கம் உள்ள ஏதேனும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமலும் கணக்குக்கு / கணக்குகளுக்கு பற்றுவைப்பதற்கும் உத்தரவாதக் கடிதங்களின் கீழ் உரிமை கோரப்பட்டதாக அல்லது செய்யப்பட்டதாக தோன்றுகின்ற அல்லது கருதப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கும் அல்லது எவையேனும் கோரிக்கைகளுடன் இணங்கியொழுகுவதற்கும் நாம் இல்லாதொழிக்கமுடியாதவாறு உமக்கு அதிகாரமளிக்கின்றோம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது கோரிக்கை எம்மீது பிணிக்கப்பட்டதாதல் வேண்டும் எனவும் உமக்கும் எமக்குமிடையில் உள்ளவாறு செலுத்துவதற்கு அல்லது அதனுடன் இணங்கியொழுகுவதற்கு நீர் பொறுப்பாக உள்ளீர் என்பது முடிவான சான்றாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் நாம் உடன்படுகின்றோம்.

அத்தகைய தொகைகளும் பணத்தொகைகளும் காலத்துக்குக் காலம் வேறுபடலாம் அல்லது குறைக்கப்படலாம் அல்லது தளம்பலடையலாம் அல்லது முழுமையாக செலுத்தப்படலாம் மற்றும் புதிய பொறுப்புக்கள் நாம் வங்கிக்கு கடனாளிகளாக இல்லாதொழிந்த பின்னர் உறப்படுதல் வேண்டும் என்பவை எவ்வாறிருப்பினும் ஏதேனும் நேரத்திலும் காலத்துக்குக்காலமும் இதனகத்துப்பின்னர் எல்லா நேரங்களிலும் வருமதியாக இருக்க வேண்டிய அல்லது இருக்கக்கூடிய அல்லது சேர்மதியாக வர வேண்டிய அல்லது சேர்மதியாக இருக்கக்கூடிய மற்றும் எம்மால் வங்கிக்குச் செலுத்தப்படற்பாலதான எல்லா மற்றும் ஒவ்வொரு தொகைக்கும் பணத்தொகைகளுக்கும் எம்மீதும் எங்கள் ஒவ்வொருவரின் மீதும் தொடர்ச்சியான பிணைப்பொறுப்பொன்றாக இந்நட்டோத்தரவாதம் பிணிக்கப்படுதல் வேண்டும்.

இந்நட்டோத்தரவாதத்தின் கீழான உமது உரிமைகள் இப்போது அல்லது அடுத்துப்பின்னர் நீர் எம்மிடமிருந்தாயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்தாயினுஞ்சரி வைத்திருக்கக்கூடிய ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு நட்டோத்தரவாதங்கள், உத்தரவாதங்கள், பிணைப்பொறுப்புக்கள் அல்லது வேறு கடப்பாடுகளுக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் எனவும் எவ்வகையிலும் அவற்றினால் பங்கப்படுத்தப்படுதலாகாது அல்லது பாதிக்கப்படுதலாகாது என நாம் மேலும் உடன்படுகின்றோம். நீர் எந்நேரத்திலும் என்னை அல்லது எம்மைக் குறிப்பீடு செய்யாமல் கொடுப்பனவுக்கான காலத்தை வழங்கலாம் அல்லது வேறு ஏதேனும் சலுகையை வழங்கலாம் அத்துடன் உம்மால் வைத்திருக்கப்படும் வேறு எவையேனும் நட்டோத்தரவாதங்களை, உத்தரவாதங்களை, பிணைப்பொறுப்புக்களை அல்லது வேறு கடப்பாடுகளை எந்நேரத்திலும் கைவிடலாம், கையாளலாம், வேறுபடுத்தலாம், பரிமாற்றலாம் அல்லது பரிபூரணமாக்குவதை அல்லது வலுவுறுத்துவதை தவிர்ந்திருக்கலாம் என்பதுடன் அவற்றுக்கான எவரேனும் திறத்தவரை அல்லது அவற்றுள் எதனையும் பொறுப்புவிடுவிக்கலாம்; அத்துடன் அவற்றை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை தேறிப்பெறலாம், இணைக்கலாம், இணக்கல்களை ஏற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இந்நட்டோத்தரவாதத்தின்கீழ் எமது பொறுப்பைப் பாதிக்காமல் நீர் தகுதியானதெனக் கருதுகின்றவாறு எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் உத்தரவாதக் கடிதங்களின் பயனுகரியுடன் வேறு எவையேனும் ஒழுங்கேற்பாடுகளையும் செய்யலாம்.

உத்தரவாதக் கடிதங்கள் ஒன்றில் அவற்றின் மூல நியதிகளுக்கிணங்க அல்லது எமது கோரிக்கையின் மீதும் உமது மற்றும் உத்தரவாதக் கடிதங்களின் பயனுகரியின் அதற்கான உடன்படிக்கையின் மீதும் காலத்துக்குக்காலம் திரிபுபடுத்தப்படலாம், திருத்தப்படலாம், புதுப்பிக்கப்படலாம் அல்லது நீடிக்கப்படலாம். இந்நட்டோத்தரவாதத்தின் கீழான எமது பொறுப்பு காலத்துக்குக் காலம் அவ்வாறு திரிபுபடுத்தப்பட்டவாறான, திருத்தப்பட்டவாறான, புதுப்பிக்கப்பட்டவாறான அல்லது நீடிக்கப்பட்டவாறான உத்தரவாதக் கடிதங்களுக்கு தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும் என நாம் உடன்படுகின்றோம்.

காலத்துக்குக் காலம் வங்கியினால் ஏலவே வழங்கப்பட்டு நிலுவையாக உள்ளவாறானதும் இப்போது செய்யப்பட்டதும் இதனகத்துப்பின்னர் வழங்கப்படக்கூடியதும் நிலுவையாக உள்ளவாறானதும் இப்போதும் இதனகத்துப்பின்னரும் வழங்கப்படக்கூடியவாறானதுமான சொல்லப்பட்ட உத்தரவாதக் கடிதங்கள் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது அவை ஒவ்வொன்றின் கீழ் அல்லது கீழானதாக கருதப்படுகின்ற காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட எல்லாக் கோரிக்கைகளையும் உரிமைக்கோரிக்கைகளையும் அத்தகைய கோரிக்கைகள் அல்லது உரிமைக்கோரிக்கைகளுள் எவையும் செல்லுபடியானதா என நிச்சயிக்காமல் அல்லது நிச்சயிப்பதற்கான கடப்பாடில்லாமலும் அத்தகைய கோரிக்கையை அல்லது உரிமைக்கோரிக்கையை எதிர்கொள்ளல் பற்றி வங்கிக்கு ஏதேனும் ஆட்சேபனையை நாம் செய்திருக்கக்கூடியமை எவ்வாறிருப்பினும் தாமதமின்றிச் செலுத்துவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட உத்தரவாதக் கடிதங்களை வங்கி வழங்குவதன் விளைவாக சொல்லப்பட்ட கம்பெனியினால் வங்கிக்கு வருமதியாகவிருக்கக்கூடிய பணத்தொகை அல்லது பணத்தொகைகள், வட்டி, தரகுப்பணம் மற்றும் வேறு விதிப்பனவுகள் சொல்லப்பட்ட கம்பெனியின் அல்லது அதன் பணிப்பாளர்களின் மீதான அல்லது அக்கம்பெனியின் அல்லது அதன் பணிப்பாளர்களின் ஏதேனும் வரையறை, மட்டுப்பாடு, இயலாமை, ஆற்றலின்மை அல்லது அதிகாரம் காரணமாக அல்லது மேற்சொல்லப்பட்ட பணத்தொகையை அல்லது பணத்தொகைகளை, வட்டியை, தரகுப்பணத்தை மற்றும் வேறு விதிப்பனவுகளை வங்கிக்குச் செலுத்துவதற்கான சொல்லப்பட்ட கம்பெனியின் கடப்பாடு வலுவுறுத்தப்பட முடியாமை காரணமாக அல்லது எத்தகையதுமான வேறு எவையேனும் நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக அறவிடப்படக்கூடியதாகவிருப்பினும் சரி அல்லாவிடினுஞ்சரி அத்துடன் வங்கிக்கு அறிய வந்தாலும் சரி அல்லாவிடினுஞ்சரி இந்நட்டோத்தரவாதம் செல்லுபடியானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும் என இத்தால் மேலும் நாம் உடன்படுகின்றோம்.

இந்நட்டோத்தரவாதம் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் அல்லது அவர்கள் சார்பாக (அத்தகைய ஆட்கள் இதனகத்துப்பின்னர் ''மூல கையொப்பமிடுநர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கையொப்பமிடப்படின் அத்துடன் அவர்களில் எவரேனும் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் (அவர் / அவர்களின் ஆற்றலின்மை அல்லது இந்நட்டோத்தரவாதத்தை முறையற்றவிதத்தில் நிறைவேற்றுதல் காரணமாக அல்லது எத்தகையதுமான வேறு ஏதேனும் காரணத்துக்காக) இந்நட்டோத்தரவாதத்தின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்படாவிடின் எஞ்சியுள்ள மூல கையொப்பமிடுநர் / கையொப்பமிடுநர்கள் அத்தகைய மூல கையொப்பமிடுநர் / கையொப்பமிடுநர்கள் இதற்கான திறத்தவரொருவராக ஒருபோதும் இருந்திருக்கவில்லை என்றாற்போன்று இந்நட்டோத்தரவாதத்தின் ஏற்பாடுகளினால் தொடர்ந்து பிணிக்கப்படுதல் வேண்டும்.

இந்நட்டோத்தரவாதம் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களினால் கையொப்பமிடப்படுகின்றவிடத்து இந்நட்டோத்தரவாதத்துக்கான வேறு எவரேனும் திறத்தவரை விடுவிப்பதன் அல்லது பொறுப்புவிடுவிப்பதன் விளைவாக அத்தகைய எவரேனும் திறத்தவருக்கு எதிராக உமது உரிமைகளையும் பரிகாரங்களையும் வேறு வகையில் பங்கப்படுத்தாமல் அல்லது பாதிக்காமல் அத்தகைய ஆட்களுள் எவரேனும் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை விடுவிப்பதற்கு அல்லது பொறுப்புவிடுவிப்பதற்கு அல்லது அத்தகைய ஆட்களுடன் இணக்குவதற்கு அவர்களிடமிருந்து இணக்கங்களை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது அவர்களுடன் வேறு எவையேனும் ஒழுங்கேற்பாடுகளைச் செய்துகொள்வதற்கு நீர் சுதந்திரமுடையவராகவிருக்கின்றீர்.

இந்நட்டோத்தரவாதம் தொடர்பில் ஏதேனும் உரிமை, தத்துவம், சிறப்புரிமை அல்லது பரிகாரத்தை நிறைவேற்றுவதில் உம்மாலான தாமதம் அல்லது விட்டுவிடுகை எதுவும் அத்தகைய உரிமை, தத்துவம், சிறப்புரிமை அல்லது பரிகாரத்தைத் தடைசெய்தலாகாது அல்லது அதன் விட்டுக்கொடுப்பொன்றாக பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது, அல்லது அத்தகைய உரிமையின், தத்துவத்தின், சிறப்புரிமையின் அல்லது பரிகாரத்தின் ஏதேனும்

தனியான அல்லது பகுதியளவிலான நிறைவேற்றுகை அதன் ஏதேனும் மேலதிக நிறைவேற்றுகையை அல்லது வேறு ஏதேனும் உரிமை, தத்துவம், சிறப்புரிமை அல்லது பரிகாரத்தின் நிறைவேற்றுகையை தடைசெய்தல் ஆகாது. இந்நட்டோத்தரவாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பரிகாரங்கள் ஒன்றுதிரண்டவை என்பதுடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள் மற்றும் பரிகாரங்களின் பிரத்தியேகமானவை அல்ல.

மேற்சொல்லப்பட்ட எமது கோரிக்கையுடன் நீர் இணங்கியொழுகுவதன் விளைவாக வங்கியினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்காக வங்கிக்கு எதிரான எவையேனும் நீதிமன்ற நடவடிக்கைகளை அல்லது தடையுத்தரவுகளை நாம் நாடமாட்டோம் என இத்தால் நாம் பொறுப்பேற்று வங்கியுடன் உடன்படுகின்றோம்.

இந்நட்டோத்தரவாதம், அதன்கீழான எமது எல்லாக் கடப்பாடுகளும் நிறைவேற்றப்படும்வரை வலுவில் இருக்கும் என நாம் உடன்படுகின்றோம் என்பதுடன் வங்கியானது எமது முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன்கீழான அதன் எவையேனும் உரிமைகளை அல்லது எல்லாவற்றையும் வேறு ஒரு திறத்தவருக்கு குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஒப்புக்கொள்கின்றோம்.

இந்நட்டோத்தரவாதம் இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என நாம் உடன்படுகின்றோம்.

………………………

தங்கள் விசுவாசமுள்ள

20………… ஆம் ஆண்டு ……………. மாதம் ……… ஆந் தேதியன்று.